# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 272/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | சந்திரன் |
| Father / Husband Name | இராமையா |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 20th June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் காளையார்கோவில் தாலுகா, சிரமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் கொங்கையா கோவில் பூசாரியாக இருந்து வருகின்றேன். விபத்தில் காயம்பட்டு இறந்த இராமையாவான என் அப்பாவும் கொங்கையா கோவில் பூசாரியாக வேலை செய்து வந்தார். கடந்த 21.01.2020 ம் தேதி மாலை 04.15 மணியளவில் செல்லத்துரை, சுப்பிரமணியன் ஆகியோர் எனக்கு போன் மூலம் என் அப்பாவிற்கு விபத்து நடந்தது குறித்து தகவல் சொன்னார்கள்.

2) அன்றைய தினம் என் அப்பா சிரமத்தில் இருந்து மறவமங்களம் சென்று டீ சாப்பிட்டுவிட்டு ஆர்ச் அருகே மாலை 04.00 மணியளவில் வந்து

கொண்டிருக்கும் போது பின்னால் வந்த டுவீலர் என் அப்பா மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

3) விபத்தில் காயம்பட்ட என் அப்பாவை சிகிச்சைக்காக மறவமங்களம் மருத்துவமனையில் சேர்த்து அதன் பின் சிவகங்கை அரசு மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்ததில் மேல்சிகிச்சைக்காக மதுரைஅரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேற்படி விபத்து சம்பந்தமாக நான் தான் காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

4) என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதன் பிறகு என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என் அப்பாவின் இறப்பிற்கு மேற்படி விபத்து தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் விபத்து நடக்கும் போது எங்கிருந்தேன் என்றால் சிரமம் கிராமத்தில் இருந்தேன். சுப்பிரமணியனும், செல்லத்துரையும் எனக்கு எங்கிருந்து தகவல் சொன்னார்கள் என்றால் சம்பவ இடத்தில் இருந்து போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள். சுப்பிரமணியன் எங்கு கடை வைத்துள்ளார் என்றால் சம்பவம் நடந்த ஆர்ச் அருகே கோழிக்கடை வைத்துள்ளார்கள். சுப்பிரமணியனும், செல்லத்துரையும் உறவினரா என்றால் இல்லை என் ஊர்க்காரர்கள்.

2) அ.சா.ஆ. 1புகாரை எனக்கு யார் எழுதிக்கொடுத்தது என்றால் போலிசார். மறவமங்களத்தில் சிகிச்சைக்கு என் அப்பாவை சேர்த்து பின் சிவகங்கை அரசு மருத்துமனை மற்றும் மதுரை அரசு மருத்துவமனை கொண்டு செல்லும் வரை போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் போலிசார் சம்பவ இடம் வந்தனரா என்றால் நான் வருவதற்குள் போலிசார் வந்து சென்றுவிட்டனர்.

3) என் அப்பா இறந்த பிறகு தான் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை விபத்து நடந்த அன்றே புகார் கொடுத்தேன். விபத்து நடந்த அன்று மறவமங்களம் வாரச்சந்தை நடந்தது என்றால் ஆமாம். சம்பவ இட ஆர்ச்க்கும், சந்தைக்கும் 100 மீ தூரம் இருக்கும் என்றால் இருக்கும். சந்தைக்கு வரும்

வாகனங்கள் சந்தைக்கு வராமல் ரோட்டின் ஓரத்தில் தான் நிறுத்தி வைப்பார்கள் என்றால் ஆமாம்.

4) ஆர்ச் அருகே வேகத்தடை உள்ளது என்றால் ஆமாம் சிறிது தள்ளி உள்ளது. அந்த ஆர்ச்க்கும், சிரமம் கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 3 கிமீ இருக்கும். என் அப்பா சைக்கிளில் சென்றாரா என்றால் இல்லை நடந்து சென்றார். விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ரோட்டின் எந்த புறத்தில் விபத்து நடந்தது என்றால் ரோட்டிற்கு கீழ்புறம் நடந்தது.

5) இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்தவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார் என்றால் ஆமாம். அன்றைய தினம் சந்தை கூட்டமாக இருந்ததால் என் அப்பா கவனமில்லாமல் ரோட்டில் வந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், இந்த விபத்திற்கு காரணம் என் அப்பா தான் என்றாலும் சரியல்ல. நான் எதிரியிடம் பணம் கொடுங்கள் என்று பேச்சு வார்த்தை நடத்தினேனா என்றால் இல்லை விபத்து ஏற்பட்டவுடன் எதிரி தான் பேச்சு வார்த்தைக்கு வருகிறேன் என்று சொன்னார்.

6) எதிரியால் வழக்கு விபத்து நடைபெறவில்லை என்றாலும், என் அப்பாவின் இறப்பை பயன்படுத்தி நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 20.06.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**